 0814

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** தொடர்பாடல் பன்முகத்தன்மையானது.

(i) புதிய ஊடகத்தில் காணக் கிடைக்கக்கூடிய பண்புகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஆளுள் தொடர்பாடலின் அனுகூலங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) வில்பர் ஷ்ராமினால் குறிப்பிடப்பட்ட வெகுசன ஊடகங்களினால் நிறைவேற்றப்படக்கூடிய பிரதான வகிபாகங்கள் **மூன்றினையும்** ஆராய்க. (12 புள்ளிகள்)

(iv) படைப்பாளி ஒருவருக்கு பண்பாட்டினைக் கற்கைகள் முக்கியமானதென்பதை **நான்கு** அம்சங்களின் அடிப்படையில் விளக்குக. (16 புள்ளிகள்)

**2.** வெகுசன ஊடகச் செயன்முறையில் பெறுநரின் கவனத்தை ஈர்ப்பது முக்கியமானது.

(i) வெகுசனத் தொடர்பாடலின் முக்கிய பண்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) விமர்சனரீதியிலான பெறுநரின் திறன்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) வியாபார - பொதுமக்கள் தொடர்பில் நுகர்வோரைக் கவர்வதற்காகப் பயன்படக் கூடுமான உபாயங்கள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) நாடொன்றில் ஊடகக் கொள்கை பெறும் முக்கியத்துவத்தை **நான்கு** பிரதான காரணிகளின்பேரில் விளக்குக. (16 புள்ளிகள்)

**3.** தற்கால ஊடகப் போக்குகளால் பெறுநர்களின் தொடர்பாடற் திறன்கள் விருத்தியடைந்துள்ளன.

(i) வாய்மொழித் தொடர்பாடற் திறன்களை விருத்தி செய்ய உதவும் அம்சங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) கல்வித் தேவைகளுக்காக மெய்நிகர்த் தொடர்பாடலானது எவ்வாறு பயன்படக்கூடும் என்பதை **இரண்டு** வழிகளில் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) பாரம்பரிய ஊடகங்களின் சிறப்பியல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) இலங்கையின் ஊடகத்துறையுடன் தொடர்புடைய நிறுவனப் போக்குகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

4. (i) உடல் மொழியில் காணக்கிடைக்கும் வாய்மொழிசாரா தொடர்பாடல் முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஊடகக் கழகத்தில் குழுத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) அரிஸ்டோட்டில் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படைக்கூறுகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) நாட்டார் நாடகங்கள் வேறுபட்ட தொடர்பாடல் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. உங்கள் சூழலில் நிகழ்த்தப்பெறும் நாட்டார் நாடகங்கள் / கூத்துக்கள் **இரண்டின்** பேரில் இக்கூற்றினை உதாரணங்களுடன், தனித்தனியாக விளக்குக. (16 புள்ளிகள்)

5. (i) வானொலி ஊடகத்தின் பண்புகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பேச்சுத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்ய உதவும் அம்சங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) தற்காலத்தில் விளங்கறிவு எண்ணக்கருவானது பல துறைகள் சார்ந்தும் விரிவடைந்து வருகின்றது. பின்வரும் இரண்டு துறைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(a) காட்சி விளங்கறிவு (Visual literacy)

(b) கணினி விளங்கறிவு (Computer literacy) (12 புள்ளிகள்)

(iv) தற்கால சமூக மாற்றங்களைப் பூகோளப் பண்பாடு எவ்வாறு பாதித்துள்ளது என்பதை **நான்கு** பிரதான அம்சங்களின்பேரில் விளக்குக. (16 புள்ளிகள்)

6. (i) திரைப்பட ஊடகத்தின் பிரதான வகைப்பாடுகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் **இரண்டு** பிரதான தடைகளின்பேரில் செய்தி பாதிக்கப்படுமாற்றலை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகத் திறனாய்வில் பயன்படக் கூடுமான கருத்தியல்கள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) "சமூக ஊடகங்களால் ஏற்படும் சமூகத் தாக்கம் நேர்மறையானது மற்றும் எதிர் மறையானது என இரண்டுமேயாகும்." அவ்வாறான நேர்மறை மற்றும் எதிர்மறைத் தாக்கங்கள் **இரண்டு** வீதம் தனித்தனியாக உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

7. பிராந்திய அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிக்கும் நிபுணர் ஒருவருக்கு அரசாங்க நிறுவனங்கள் பற்றிய சில தகவல்கள் தேவையாக இருந்தன.

(i) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவனங்களிலிருந்து **பெறமுடியாத** (விலக்களிக்கப்பட்ட) **இரண்டு** வகையான தகவல்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்காக வினாக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. வினாக்கொத்தொன்றைத் தயாரிக்கும்போது அவசியம் **செயற்படுத்தப்படக்கூடாத இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்போது முரண்பாடுகள் எழ முடியும். முரண்பாட்டுத் தீர்வில் பின்பற்றப்படும் படிமுறைகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) சமூகமொன்றுக்கு அபிவிருத்தித் தகவல்களை எடுத்துச்செல்லும் பொறிமுறையில் ஊடகக்குவிகை தாக்கத்தைச் செலுத்துகின்றது. பின்வரும் ஊடகங்களின்பேரில் ஊடகக்குவிகையை விளக்குக.

(a) செய்திப்பத்திரிகை

(b) வானொலி

(c) தொலைக்காட்சி

(d) சினிமா

(16 புள்ளிகள்)

* * *

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப்** பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** செய்தியொன்றின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான செயன்முறை
(1) குறிமுறையாக்கம் ஆகும். (2) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.
(3) நிலைநோக்குதல் ஆகும். (4) கற்பனையாக்கம் ஆகும்.
(5) செவிமடுத்தல் ஆகும்.

**2.** சுய எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் தொடர்பாடல் வகை
(1) ஆளுள் தொடர்பாடல் (2) ஆளிடைத் தொடர்பாடல்
(3) காட்சித் தொடர்பாடல் (4) செவிப்புலத் தொடர்பாடல்
(5) வெகுசனத் தொடர்பாடல்

**3.** இலங்கையில் தொட்டுணரமுடியாத பண்பாட்டு மரபொன்றாகக் கருதப்பட முடியுமாவது எது?
(1) குளங்கள் (2) தாதுகோபங்கள்
(3) நாட்டார் பாடல்கள் (4) சிற்பங்கள்
(5) பழங்காலச் சிதைவுகள்

**4.** வெகுசன ஊடகத்திற்கும் பெறுநருக்கும் இடையிலான உறவுப்பிணைப்பொன்று உருவாவது
(1) படைத்தலினால் ஆகும். (2) செய்தியினால் ஆகும்.
(3) சர்ப்பினால் ஆகும். (4) ஊக்கத்தினால் ஆகும்.
(5) ஆழ்பரிவினால் ஆகும்.

**5.** தொடர்பாடல் வகைகள் தெளிவாக வேறுபடுத்தக்கூடியவையாக அமைவது
(1) சூழ்நிலையினால் ஆகும்.
(2) நிறுவனத்தினால் ஆகும்.
(3) எண்ணிக்கையினால் ஆகும்.
(4) நேரத்தினால் ஆகும்.
(5) தனியாளது நடத்தையினால் ஆகும்.

**6.** தொடர்பாடலின் இயல்பை மிகத் துல்லியமாக விளக்கும் கூற்று எது?
(1) தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.
(2) தொடர்பாடல் இருவழியிலானது.
(3) தொடர்பாடல் தடையைக் கொண்டிருக்கும்.
(4) தொடர்பாடல் வாய்மொழியிலானது.
(5) தொடர்பாடல் பின்னூட்டத்தில் தங்கியிருக்கும்.

7. சமூக நிலைநிறுத்தலினைப் பேணிக்கொள்வதற்கு வெகுசன ஊடகம் அவசியம் நிகழ்த்த வேண்டிய பணி
   (1) பொருட்கோடல்
   (2) மேற்பார்வை
   (3) தூண்டுதல்
   (4) இணைப்பாக்கம்
   (5) பொழுதுபோக்கு

8. இலங்கையில் முதற் தடவையாக முறைசார்ந்து தொடர்பாடல் பாடத்துக்குரிய பாடக்கற்கையை முன்னோடியாக அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?
   (1) தொழினுட்பக் கல்லூரி, மருதானை
   (2) களனிப் பல்கலைக்கழகம், தெஹிவளை
   (3) அரசாங்கத் தகவல் திணைக்களம்
   (4) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
   (5) களனிப் பல்கலைக்கழகம்

9. எதிர்பார்க்கப்படும் அனர்த்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் முன்னரே சமூகத்திற்குத் தகவலளித்து, கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பிக்கும் வெகுசன ஊடகப் பணி எது?
   (1) மேற்பார்வை
   (2) இணைப்பாக்கம்
   (3) பொருட்கோடல்
   (4) பரவுதல்
   (5) சமூகமயமாதல்

10. அபிவிருத்தி என்பது பொருள்சார்ந்த அபிவிருத்தி அல்ல, மாறாக மனித அபிவிருத்தி என உரைத்த நிபுணர் யார்?
   (1) டட்லி சியர்ஸ்
   (2) மகாத்மா காந்தி
   (3) எட்கர் ஓவன்ஸ்
   (4) எவரெட் எம். ரோஜர்ஸ்
   (5) ஸ்ரீனிவாஸ் மெல்கொட்டே

11. கிரஹாம் வாலஸினால் அறிமுகப்படுத்தப்பட்ட படைப்பாக்கச் சிந்தனைக்கான படிமுறைகளுடன் பின்வருவனவற்றில் எது தொடர்புபடுகின்றது?
   (1) பரபரப்பு
   (2) கற்பனை
   (3) புலக்காட்சி
   (4) எடுத்துக்காட்டுதல்
   (5) சரிபார்த்தல்

12. செய்தியொன்றைப் புரிந்துகொள்வதும் பொருட்கோடல் செய்வதும் தொடர்புபடுவது
   (1) திறனாய்வுடன் ஆகும்.
   (2) பகுப்பாய்வுடன் ஆகும்.
   (3) விளங்கறிவுடன் ஆகும்.
   (4) மதிப்பிடுதலுடன் ஆகும்.
   (5) பயன்பாட்டுடன் ஆகும்.

13. நடப்பு விவகாரங்களை போதுமானளவு உள்ளடக்கியிராத இரண்டு ஊடகங்கள் யாவை?
   (1) வானொலி மற்றும் தொலைக்காட்சி
   (2) தொலைக்காட்சி மற்றும் சினிமா
   (3) சினிமா மற்றும் செய்திப்பத்திரிகை
   (4) செய்திப்பத்திரிகை மற்றும் சஞ்சிகை
   (5) சஞ்சிகை மற்றும் புத்தகம்

14. டெங்குக் காய்ச்சல் பற்றி அனைத்து ஊடகங்களும் எண்ணிக்கையில் பலவான செய்தியறிக்கைகளைக் கடந்த வாரம் வெளியிட்டிருந்தன. இது,
   (1) ஒரு ஊடக விஸ்தீரணம் ஆகும்.
   (2) ஒரு ஊடகச் செல்வாக்கு ஆகும்.
   (3) ஒரு ஊடக இரைச்சல் ஆகும்.
   (4) ஒரு ஊடகப் பின்னூட்டம் ஆகும்.
   (5) ஒரு வாயிற்காப்புச் செயற்பாடு ஆகும்.

**15.** அபிவிருத்திச் செயன்முறையில் குழுக்களிடையே ஒருமித்த அனுபவக் களங்கள் இருந்ததே செயற்றிட்டம் வெற்றியடைய அனுசரணையானது என வகுப்பறையில் விவசாய ஆசிரியர் கூறினார். தொடர்பாடல் வரைவிலக்கணத்தின்படி, இந்தச் சிந்தனை அதிகம் பொருத்தப்பாடுடையதாயிருப்பது
(1) ஹரோல்ட் டீ லாஸ்வெல்லுடன் ஆகும்.
(2) வில்பர் ஷ்ராமுடன் ஆகும்.
(3) எட்வேர்ட் சாப்பியருடன் ஆகும்.
(4) குளோட் ஷனனுடன் ஆகும்.
(5) சார்ள்ஸ் கூலியுடன் ஆகும்.

**16.** ஊடக விளங்கறிவு பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இது ஒரு பல்-பரிமாண எண்ணக்கரு.
(2) இது பெறப்படும் தகவலை அடிப்படையாகக் கொண்டது.
(3) உணர்ச்சி, அழகியல் மற்றும் ஒழுக்கம்சார் அம்சங்களும் முக்கியமானவை.
(4) இது ஊடகத்துடன் அளவுக்கதிகமான வெளிப்பாட்டுடன் இருப்பதன் அடிப்படையிலானது.
(5) இது சுயமுயற்சி வழியாக விருத்தியடையக் கூடியது.

**17.** லியனார்டோ டாவின்சி அறிமுகப்படுத்திய படைப்பாக்கக் கூறுகளை மாத்திரம் சுட்டிநிற்கும் தெரிவு எது?
(1) ஆர்வம், தொடர்பயிற்சி, தொடர்பு
(2) மென்மை, புலக்காட்சி, பரபரப்பு
(3) தொடர்பு, பரபரப்பு, மென்மை
(4) நிருபணம், புலக்காட்சி, ஆர்வம்
(5) பரபரப்பு, தொடர்பயிற்சி, விடயத்தை வெளிப்படுத்துதல்

**18.** புதிய ஊடகப் போக்குகள் காரணமாக பெறுநரின் வகிபங்கு மாற்றமடைந்துள்ளது. இந்தக் கூற்றுடன் மிகவும் பொருந்தும் தெரிவு
(1) பெறுநர் செயற்படு பயனராக உருவாகியுள்ளார்.
(2) பெறுநர் புதிய தொழினுட்பப் பாவனையுடன் பரிச்சயமானவராக உருவாகியுள்ளார்.
(3) பெறுநர் ஊடக உள்ளடக்கங்களை வேண்டிப் பெறும் ஒரு நுகர்வோராவார்.
(4) பெறுநர் சில வேளைகளில் செயற்றிறனுடன் ஊடக உள்ளடக்கத்தை உருவாக்குபவராவார்.
(5) பெறுநர் குறிப்பிட்ட வரையறையளவில் வாயிற்காப்புச் செல்வாக்கிலிருந்து விடுபட்டுள்ளார்.

**19.** மாணவர் ஒருவருக்கு அவரது ஆய்வுக்காகப் பழைய செய்திப்பத்திரிகைகள் பலவற்றை உசாவும் தேவையிருந்தது. நூலகமொன்றிற்குச் செல்லாமல், வீட்டிலிருந்தே இணையத்தளங்களின் ஊடாகத் தொடர்புடைய தகவல்களை அவரால் பெற முடியும். புதிய ஊடகத்தின் எப்பண்பு அந்தச் செயன்முறைக்கு உதவும்?
(1) வலையமைப்பாதல்
(2) மீயுரை
(3) அதிவேகச் செய்தியனுப்புகை
(4) தரவுத்தளம்
(5) தானியங்கி

**20.** பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழ்களின் மூன்று முக்கிய வகைகளை உள்ளடக்கும் பதிலைத் தெரிவுசெய்க.
(1) X, U, B
(2) S, M, R
(3) U, X, A
(4) H, U, B
(5) A, X, R

**21.** புத்தாண்டின் ஆரம்பத்தைக் கொண்டாடுமுகமாக இசைநிகழ்ச்சியொன்று குறிப்பிட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. எந்த தொடர்பாடல் வகைக்கு இந்த இசைநிகழ்ச்சி உரித்தானது?
(1) குழுத் தொடர்பாடல்
(2) மெய்நிகர்த் தொடர்பாடல்
(3) வெகுசனத் தொடர்பாடல்
(4) பொதுசனத் தொடர்பாடல்
(5) செவிப்புலத் தொடர்பாடல்

22. உள்ளகப் பொதுசனத் தொடர்புக் கருவிகளை மாத்திரம் உள்ளடக்கும் பதிலைத் தெரிவுசெய்க.
(1) ஊடக அறிக்கை, செய்திமடல், வருடாந்தச் சுற்றுலா
(2) மின்னஞ்சல், ஊடகப்பொதி, செய்திமடல்
(3) அறிவிப்புப் பலகை, வருடாந்தச் சுற்றுலா, உள்ளகத் தொடர்பாடல் முறைமை
(4) பரிந்துரைப் பெட்டி, கண்காட்சி, அறிவிப்புப் பலகை
(5) வருடாந்த அறிக்கைகள், உள்ளகத் தொடர்பாடல் முறைமை, ஊடக அறிக்கை

23. செவ்வியற் பண்பாட்டின் உருவாக்கத்தை அதிகம் பாதிப்பது பின்வருவனவற்றுள் எது?
(1) பாரம்பரியப் பண்பாடு
(2) வெகுசனப் பண்பாடு
(3) பிரசித்த பண்பாடு
(4) பூகோளப் பண்பாடு
(5) ஊடகப் பண்பாடு

24. தொடர்பாடல் செயற்பாட்டின் கூறுகளை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு எது?
(1) குறிமுறையாக்கம், பார்வை, தாக்கம், இரைச்சல்
(2) அனுபவக் களம், அலைவரிசை, செவிமடுத்தல், குறிமுறையவிழ்ப்பு
(3) இரைச்சல், பெறுநர், சந்தர்ப்பம், புலக்காட்சி
(4) தொடர்பாடுநர், பின்னூட்டம், அறிகை, அலைவரிசை
(5) சந்தர்ப்பம், இரைச்சல், தாக்கம், அனுபவக் களம்

25. பின்வரும் தகவல்களைக் கருத்திற்கொள்க.

| | கலைச்சொல் | விளக்கம் |
|---|---|---|
| A | குழுவாக்கல் | செய்தியொன்றில் சமனான மற்றும் சமனற்ற பகுதிகளை ஒப்பிடுதல் |
| B | உய்த்தறிதல் | பொதுவான விடயங்களைப் பயன்படுத்தி விசேடமானதொன்றை விளக்க முயற்சித்தல் |
| C | தொகுப்பாக்குதல் | இருக்கும் பகுதிகளை இணைத்து புதிய கட்டமைப்பொன்றை உருவாக்குதல் |

கலைச்சொல்லதும் அதன் விளக்கத்தினதும் இணைவைச் சுட்டிக்காட்டுவது எது?
(1) A மாத்திரம்
(2) A மற்றும் B மாத்திரம்
(3) A மற்றும் C மாத்திரம்
(4) B மற்றும் C மாத்திரம்
(5) A, B, C ஆகிய அனைத்தும்

26. தகவல் ஒரு வணிகப் பொருள் (படைப்பு) என அறிமுகப்படுத்தும் ஊடகப் போக்கு எது?
(1) ஊடகக் குவிகை
(2) சிறுகூறுகளாக்குதல்
(3) நுகர்வுமயமாதல்
(4) பூகோளமயமாதல்
(5) பண்டமயமாக்குதல்

27. நிமால் மைதானத்தில் ஒலிபெருக்கி வழியாக அறிவிப்பொன்றைச் செவிமடுத்த பின்னர், அதனைக் குமாருக்குச் சொல்ல எண்ணினான். தனது கைத்தொலைபேசி வழியாகக் குமாருடன் அதுபற்றி அவன் கலந்துரையாடினான். இங்கு காணக்கிடைக்கும் தொடர்பாடல் வகைகளின் வரிசைக்கிரமம்
(1) பொதுசன, ஆளுள் மற்றும் ஆளிடைத் தொடர்பாடல்கள்
(2) பொதுசன, செவிப்புல மற்றும் குழுத் தொடர்பாடல்கள்
(3) குழு, வெகுசன மற்றும் ஆளிடைத் தொடர்பாடல்கள்
(4) செவிப்புல, ஆளுள் மற்றும் ஆளிடைத் தொடர்பாடல்கள்
(5) ஆளிடை, குழு மற்றும் வெகுசனத் தொடர்பாடல்கள்

28. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் பற்றிய கலந்துரையாடலின்போது பின்வரும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

A - இது ஓர் உடன்படிக்கை அல்லாததால், உறுப்பு நாடுகளுக்குச் சட்டரீதியான நேரடிப் பிணைப்புக் காணப்படாது.
B - இது இரண்டாம் உலகப்போரின் ஒரு விளைவாக உருவாக்கப்பட்டது.
C - இந்தப் பிரகடனம் 1948 இல் வெளியிடப்பட்டது.
D - 19 ஆவது உறுப்புரை தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்டது.
E - ஒவ்வோர் ஆண்டின் டிசம்பர் 1 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் நாளாகப் பெயரிடப்பட்டது.

மேற்குறித்த கூற்றுகளுள், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்துடன் **தொடர்பற்ற** முன்வைப்பு

(1) A ஆகும்.
(2) B ஆகும்.
(3) C ஆகும்.
(4) D ஆகும்.
(5) E ஆகும்.

29. தன்னைப் பாதித்த பிரச்சினையொன்றிலிருந்து விடுபட விரும்பிய குமணன் வானொலி வழியாக ஒலிபரப்பப்பட்ட பாடலொன்றைச் செவிமடுத்தான். இந்தத் தொடர்பாடற் சந்தர்ப்பம் குறிப்பிட முடியுமாவது,

(1) அறிகை என ஆகும்.
(2) திசைதிரும்பல் என ஆகும்.
(3) மீளப் பெறல் என ஆகும்.
(4) விஸ்தீரணம் என ஆகும்.
(5) சமூக உபயோகத் தன்மை என ஆகும்.

30. பாரிய, பரந்திருக்கும் பெறுநர்களுக்குப் பதிலாக குறித்த பெறுநர் தொகுதியொன்றுக்குத் தொடர்பாடல் செய்வதென்பது

(1) சிறுகூறுகளாக்குவதன் ஓர் அடிப்படைப் பண்பாகும்.
(2) வணிகமயப்படுத்தலின் ஓர் அடிப்படைப் பண்பாகும்.
(3) வெகுசனத் தொடர்பாடலின் ஓர் அடிப்படைப் பண்பாகும்.
(4) பண்டமயமாக்கலின் ஓர் அடிப்படைப் பண்பாகும்.
(5) குவிகையின் ஓர் அடிப்படைப் பண்பாகும்.

31. ஆய்வொன்றில் ஆரம்பத்திலிருந்தே நிலைத்திருப்பினை வெளிப்படுத்தி நிற்பது பின்வருவனவற்றுள் எது?

(1) தரவுகளின் தொகை
(2) ஆய்வுப் பிரச்சினை
(3) இலக்கிய மீளாய்வு
(4) தரவுகளை முன்வைக்கும் முறை
(5) முடிவு

32. வெகுசன ஊடகங்களில் இடம்பெறும் வாயிற்காப்புச் செயன்முறை தொடர்பில் வகுப்பறையில் மாணவர்களிடையே கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

மது - இச்செயன்முறையில் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன.
ரவி - செய்திகள் திரிபுபடுத்தப்பட முடியும்.
கமலா - செய்திகளின் பெறுமதியை இது அதிகரிக்கவும் கூடும்.

இவற்றுள், ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தை/கருத்துகளை முன்வைத்தவர் / முன்வைத்தவர்கள்

(1) மது மாத்திரம்
(2) கமலா மற்றும் மது மாத்திரம்
(3) ரவி மற்றும் கமலா மாத்திரம்
(4) மது மற்றும் ரவி மாத்திரம்
(5) மது, ரவி, மற்றும் கமலா அனைவரும்

33. பொதுமக்கள் தொடர்பின் பரப்புரை மாதிரியில் காணக்கிடைக்கும் தொடர்பாடல் தன்மை எது?


(1) ஒரு வழித் தொடர்பாடல்
(2) இரு வழித் தொடர்பாடல்
(3) சமச்சீரற்ற தொடர்பாடல்
(4) மூடப்பட்ட தொடர்பாடல்
(5) வாய்மொழித் தொடர்பாடல்

[பக். 6 ஐப் பார்க்க

34. ஊடகத் தரவரிசைகள் (ratings) விளக்குவது
(1) வணிகமயப்படுத்தலை ஆகும்.
(2) பொதுசனத் தொடர்பினை ஆகும்.
(3) ஊடகத் தரத்தினை ஆகும்.
(4) ஊடக நுகர்வின் இயல்பை ஆகும்.
(5) அதிகரிக்கும் ஊடகப் பண்டமயமாக்கலை ஆகும்.

• கீழே தரப்பட்ட வரைபடத்தை **35** தொடக்கம் **38** வரையான வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்துக.

S என்பது இரு வேறுபட்ட தொடர்பாடல் மாதிரிகளுக்கும் உரித்தான தொடர்பாடல் செயன்முறைகளினது மூலம் எனக் கருத்திற்கொள்க.




35. இடதுபுறமிருக்கும் தொடர்பாடல் மாதிரியின்படி, முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடலின் அடிப்படைக் கூறு
(1) அனுபவக் களம் ஆகும்.
(2) பின்னூட்டம் ஆகும்.
(3) தாக்கம் ஆகும்.
(4) இடையூறு ஆகும்.
(5) சூழல் ஆகும்.

36. இடம் மற்றும் வலப்புறங்களில் இருக்கும் தொடர்பாடல் மாதிரிகள் இரண்டிலும் **தொடர்புபடாத** கூறு
(1) செய்தி ஆகும்.
(2) இடையூறு ஆகும்.
(3) குறிமுறையாக்கம் ஆகும்.
(4) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.
(5) பின்னூட்டம் ஆகும்.

37. இடதுபுறமுள்ள தொடர்பாடல் மாதிரியில், S இலிருந்து D இற்குச் செல்லும் தொடர்பாடலின் கூறு, வலதுபுறமுள்ள மாதிரியில் வகைகுறித்திருப்பது
(1) S இனால் மாத்திரம் ஆகும்.
(2) Q இனால் மாத்திரம் ஆகும்.
(3) R இனால் மாத்திரம் ஆகும்.
(4) P மற்றும் Q இனால் மாத்திரம் ஆகும்.
(5) P மற்றும் R இனால் மாத்திரம் ஆகும்.

38. வலதுபுறமுள்ள மாதிரியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இரண்டு கூறுகள், இடதுபுறமுள்ள மாதிரியில் மறைமுகமாக அறிமுகப்படுத்தப்பட்டது
(1) தொடர்பாடுநர் மற்றும் சூழல் என்பதாக ஆகும்.
(2) அனுபவக் களம் மற்றும் இடையூறு என்பதாக ஆகும்.
(3) குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பு என்பதாக ஆகும்.
(4) பொருட்கோடல் மற்றும் தாக்கம் என்பதாக ஆகும்.
(5) செலுத்தி மற்றும் சேருமிடம் என்பதாக ஆகும்.

39. ஊடக அதிகாரி, பொதுசனத் தொடர்பு அதிகாரி மற்றும் நிகழ்வு முகாமையாளர் ஆகிய மூன்று வகிபாகங்களுக்கும் பொதுவானது **அல்லாத** பணி யாது?
(1) நல்லெண்ணத்தை உருவாக்கல்
(2) நிதி முகாமைத்துவம்
(3) பங்குதாரர்களுக்குத் தகவலளித்தல்
(4) ஊடக மாநாடுகளை நடாத்துதல்
(5) முரண்பாட்டு முகாமைத்துவம்

[பக். 7 ஐப் பார்க்க

40. இலங்கையில் இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலி / ஒளிபரப்பு அலைவரிசைகள் ஒதுக்கீடு செய்யப்படுவது
(1) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஆகும்.
(2) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் ஆகும்.
(3) தேசிய புலமைச்சொத்துப் பணிமனையினால் ஆகும்.
(4) இலங்கை ஒலிபரப்பாளர் சங்கத்தினால் ஆகும்.
(5) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆகும்.

41. ஊடக ஆய்வொன்றுக்கான மாதிரியைத் தெரிவுசெய்வதுடன் சம்பந்தப்பட்ட **தவறான கூற்றைத் தெரிவுசெய்க.**
(1) மாதிரித் தெரிவு முழுச் சனத்தொகையையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கும்.
(2) பிரச்சினையின் இயல்பிற்கேற்ப மாதிரி தெரிவுசெய்யப்படுவது அவசியமாகும்.
(3) மாதிரித் தெரிவின்போது புள்ளிவிபர அடிப்படை முக்கியமானதாகும்.
(4) மாதிரியைத் தெரிவுசெய்யும்போது சார்புநிலை எடுப்பது சனத்தொகையைச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும்.
(5) சரியான கலப்புடன் தெரிவுசெய்யப்படும் மாதிரி வழியாக முழுச் சனத்தொகையையும் முடிவுகள் சேர முடியும்.

42. ஒழுங்குபடுத்தல் (தணிக்கை) பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.
A - சட்டத்தினால் உருவாக்கப்பட்டது
B - கல்விசார் ஆய்வாளர்களுடன் தொடர்பு காணப்படுவது
மேலேயுள்ள கூற்றுகள் A மற்றும் B உடன் தொடர்புபட்ட சரியான பதிலைத் தெரிவுசெய்க.
(1) A - கூட்டு ஒழுங்குபடுத்தல் B - நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தல்
(2) A - நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தல் B - கூட்டு ஒழுங்குபடுத்தல்
(3) A மற்றும் B - இரண்டும் சட்டரீதியான ஒழுங்குபடுத்தல்
(4) A மற்றும் B - இரண்டும் கூட்டு ஒழுங்குபடுத்தல்
(5) A மற்றும் B - இரண்டும் நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தல்

43. போட்டி வழியான பதவிநிலை ஒன்றுக்கு ராஜா நேர்காணலை எதிர்கொண்டபோது, அவரின் சமூக ஊடகப் பாவனையின் வலு, அப்பணியினைப் பெற அவருக்கு உதவியது. இவ்வாறான சந்தர்ப்பமொன்றில் மிக முக்கியமான சமூக ஊடகமாக அமைவது
(1) லிங்க்டின் ஆகும்.
(2) ருவிட்டர் ஆகும்.
(3) ரிக்ரொக் ஆகும்.
(4) முகநூல் (facebook) ஆகும்.
(5) இன்ஸ்டாகிராம் ஆகும்.

44. புலமைச் சொத்துச் சட்டம் பற்றிய பின்வரும் கூற்றுகளிலிருந்து **தவறான கூற்றைத் தெரிவுசெய்க.**
(1) புலமைச் சொத்து படைப்பாக்கத்திலும் உரிமையாண்மையிலும் தங்கியிருக்கின்றது.
(2) நியாயமான பாவனைக்கான வெளி புலமைச் சொத்தின் வரையறைகளை மீறுவதில்லை.
(3) படைப்பாக்கத்திற்கான செயன்முறை சட்ட ஒழுங்குகளால் பாதுகாக்கப்படுகின்றது.
(4) பொருளாதார உரிமைகள் மாத்திரம் புலமைச் சொத்துக்கு உரியவை.
(5) தழுவல், மொழிபெயர்ப்பு மற்றும் விநியோக உரிமைகள் ஆக்கியோனுக்குச் சொந்தமானவை.

45. பின்வரும் நிறுவனங்கள் மற்றும் விபரங்கள் தொடர்பில் கவனம் செலுத்துக.

| நிறுவனங்கள் | விபரங்கள் |
|---|---|
| 1. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு | A. தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். |
| 2. இலங்கை பத்திரிகைப் பேரவை | B. இலங்கை பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்ததாக 2003 இல் உருவாக்கப்பட்டது. |
| 3. பொது அளிக்கைகள் கட்டுப்பாட்டுச் சபை | C. கைத்தொலைபேசிப் பயன்பாடு தொடர்பான விடயங்கள் பற்றிய புகார்கள் முறையிடப்பட முடியும். |
| 4. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டுச் சபை | D. சமூக ஊடக வலையமைப்புகள் தொடர்பான புகார்கள் முன்வைக்கப்பட முடியும். |
| 5. இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம் | E. உறுப்பினர்களை நியமிப்பது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பணியாகும். |

நிறுவனங்களும் விபரங்களும் ஒத்திசைவுமானால் சரியான விடையாக அமைவது
(1) 1A, 2B, 3C, 4D, 5E ஆகும்.
(2) 1C, 2A, 3E, 4B, 5D ஆகும்.
(3) 1C, 2D, 3E, 4B, 5A ஆகும்.
(4) 1E, 2D, 3C, 4B, 5A ஆகும்.
(5) 1D, 2C, 3E, 4A, 5B ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

46. ரமேஷ் குறித்தவொரு சம்பவம் பற்றிய தகவலை செய்தி இணையத்தளமொன்றில் தேடினான். அவ்வாறு வாசித்துக் கொண்டிருக்கும்போது, அந்த விடயம் பற்றிய மேலதிக தகவலை அங்கிருந்த கைச் சின்னமொன்றைச் சொடுக்குவதன் மூலம் அவனால் பெற முடிந்தது. இந்தச் செயற்பாட்டை விளக்கும் பதம் யாது?
   (1) எண்ணிமப்படுத்தல் ஆகும்.
   (2) இடைத் தொடர்பாக்கம் ஆகும்.
   (3) வலையமைப்பாதல் ஆகும்.
   (4) மீயுரை ஆகும்.
   (5) தானியங்கி ஆகும்.

47. விளம்பரமொன்றின் உள்ளடக்கம் செய்தியொன்றாக வெளியிடப்படுவது
   (1) செய்தித்துளை என்பதாக அழைக்கப்படும்.
   (2) வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் என்பதாக அழைக்கப்படும்.
   (3) ஆசிரிய விளம்பரம் என்பதாக அழைக்கப்படும்.
   (4) கட்டணம் செலுத்தப்பட்ட செய்தி என்பதாக அழைக்கப்படும்.
   (5) ஊடக அறிக்கை என்பதாக அழைக்கப்படும்.

48. பாரம்பரிய ஊடகம் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) அதன் வடிவம் மாறாத்தன்மை ஆனது.
   (2) அது சமூகமயமாதலிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றது.
   (3) அது தலைமுறைகள் வழியாக வாழ்ந்துவருகின்றது.
   (4) அது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் படைப்பாளியை யாரென அடையாளப்படுத்தக் கூடுமானது.
   (5) அது நெகிழ்வுப் போக்குடையது.

49. 'புத்தாக்கப் பரவலாக்கம்' என்பதால் அர்த்தம் கொள்ளப்படுவது யாது?
   (1) அபிவிருத்திக்கான பொதுமக்களின் பங்கேற்பு என்பதாக ஆகும்.
   (2) தகவல் பரவலாக எடுத்துச் செல்லப்படுதல் என்பதாக ஆகும்.
   (3) தொடர்பாடலுக்கும் அபிவிருத்திக்கும் இடையேயான தொடர்பு என்பதாகும்.
   (4) தொழினுட்பப் போக்குகளையும் சிந்தனைகளையும் பரவலாக்குதல் என்பதாக ஆகும்.
   (5) சமூகத்திற்கு நவீனமயமாதல் செயன்முறையை அறிமுகஞ் செய்தல் என்பதாக ஆகும்.

50. நுகர்வோரைக் கவர்வதற்காக நிறுவன சமூகப் பொறுப்புணர்வுச் (CSR) செயற்றிட்டங்கள் அதிகம் செயற்படுத்தப்படுவது
   (1) ஊடகம் - பொதுமக்கள் தொடர்பில் ஆகும்.
   (2) வியாபாரம் - பொதுமக்கள் தொடர்பில் ஆகும்.
   (3) தொழில்சார் - பொதுமக்கள் தொடர்பில் ஆகும்.
   (4) அரச - பொதுமக்கள் தொடர்பில் ஆகும்.
   (5) நிறுவன - பொதுமக்கள் தொடர்பில் ஆகும்.

※ ※ ※

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **29**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 4 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 3 | 32. | 5 | 42. | 3 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 2 | 33. | 1 | 43. | 1 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 5 | 34. | 4 | 44. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 5 | 35. | 4 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 5 | 36. | 5 | 46. | 4 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 1 | 37. | 5 | 47. | 3 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 5 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 2 | 39. | 2 | 49. | 4 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 1 | 40. | 5 | 50. | 2 |

○ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

(11) WWW.PastPapers.WiKi (11)

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ...

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **29**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 4 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 3 | 32. | 5 | 42. | 3 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 2 | 33. | 1 | 43. | 1 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 5 | 34. | 4 | 44. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 5 | 35. | 4 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 5 | 36. | 5 | 46. | 4 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 1 | 37. | 5 | 47. | 3 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 5 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 2 | 39. | 2 | 49. | 4 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 1 | 40. | 5 | 50. | 2 |



විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி

## தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## 29 - பகுதி II

01. தொடர்பாடல் பன்முகத்தன்மையானது.

(i) புதிய ஊடகத்தில் காணக் கிடைக்கக்கூடிய பண்புகள் இரண்டினைப் பெயரிடுக.

- எண்ணிமப்படுத்தல்.
- இடைத்தொடர்பாக்கம்.
- மீயுரை.
- தானியங்கி.
- தரவுத்தளம்.
- வலையமைப்பாதல்.
- அதிவேகச் செய்தியனுப்புகை.

(2×2 புள்ளிகள் = 4 புள்ளிகள்)

(ii) ஆளுள் தொடர்பாடலின் அனுகூலங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

- ஆளுமை விருத்தி.
- சுய எண்ணக்கரு விருத்தி.
- சிந்தனை வளர்ச்சி.
- நினைவில் வைத்துக்கொள்ளுதல்.
- தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.
- விமர்சனத்திறன் வளர்ச்சி.
- படைப்பாக்கத் திறன் விருத்தி.

(2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

(iii) வில்பர் ஷ்ராமினால் குறிப்பிடப்பட்ட வெகுசன ஊடகங்களினால் நிறைவேற்றப்படக் கூடிய பிரதான வகிபாகங்கள் மூன்றினையும் ஆராய்க.

- பாதுகாவலர் ஒருவரின் வகிபாகம்
  நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பில் விழிப்புணர்வுடனும் அவதானத்துடனும் செயற்படல்.

- கலந்துரையாடல் சபையின் வகிபாகம்
  பல்வேறு தரப்பினரையும் ஓரிடத்தில் இணைத்து அவர்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கலந்துரையாடலை நெறிப்படுத்தல்.

- ஆசிரியர் ஒருவரின் வகிபாகம்
  அறிவு, மனப்பாங்கு, ஆளுமை மற்றும் திறன்களை மக்களுக்கு வழங்குதல்.

(3×4 புள்ளிகள் = 12 புள்ளிகள்)

(iv) படைப்பாளி ஒருவருக்கு பண்பாட்டிடைக் கற்கைகள் முக்கியமாவதனை நான்கு அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

- மக்களின் உணர்ச்சிகளை / பிரக்ஞைகளை அறிந்துகொள்ளல்.
- படைப்பாக்கச் சிந்தனையை வலுப்படுத்துதல்.
- பல்வேறு பண்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளல்.
- ஒவ்வொரு பண்பாட்டினதும் உள்ளடக்கங்கள் மற்றும் பெறுமானங்களை அறிந்துகொள்ளல்.
- ஒவ்வொரு பண்பாட்டினதும் தனித்துவமான கூறுகளை அறிந்துகொள்ளல்.
- பண்பாடுகளுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்துதல்.
- பண்பாட்டுப் பல்வகைமை பற்றிய அறிவை விருத்தி செய்தல்.
- பண்பாட்டுப் பல்வகைமைக்கு மதிப்பளித்துப் படைப்பாக்கங்களை உருவாக்குதல்.
- பண்பாடுகளுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்துதல்.
- புதிய கருப்பொருட்களை அறிந்து கொள்ள உதவுதல்.
- புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ள உதவுதல்.
- படைப்பாக்கங்களின்போது பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை பயன்படுத்துவதால் ஒவ்வொருவரு தமது படைப்புக்குரிய படைப்பாக்கச் சிந்தனையைப் பெற்றுக் கொள்ளல்.

(4×4 புள்ளிகள் = 16 புள்ளிகள்)

**02. வெகுசன ஊடகச் செயன்முறையில் பெறுநரின் கவனத்தை ஈர்ப்பது முக்கியமானது**

(i) வெகுசனத் தொடர்பாடலின் முக்கிய பண்புகள் நான்கினைப் பெயரிடுக.

- தொழினுட்பச் சாதனங்களின் பயன்பாடு காணப்படும்.
- விரைவானதுடன், தொடர்ச்சியானதுமாகக் காணப்படும்.
- ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு காணப்படும்.
- தொழில்சார் தொடர்பாடுநர்கள் காணப்படுவர்.
- வாயிற்காப்பாளர்கள் பலர் காணப்படுவர்.
- காலத்தால் பிந்திய பின்னூட்டம் காணப்படும்.
- பொதுவான செய்தி வழங்கப்படும்.
- பெரும்பாலும் இலாபத்தை இலக்காகக் கொண்டு செயற்படும்.
- வழங்குநருக்கும், பெறுநருக்கும் இடையிலான இடைவெளி அதிகம் காணப்படும்.
- ஒப்பீட்டளவில் செலவு அதிகம் காணப்படும்.
- பூகோள வரையறைகளைக் கடந்தும் பெறுநர்கள் காணப்படுவர்.
- பெரும்பாலும் ஒருவழிப் போக்கானது.
- அதிவிசால சனக்கூட்டத்தை ஒரே நேரம் இலக்காகக் கொண்டு தகவல்கள் வழங்கப்படும்.
- உள்ளடக்கம் அனைவருக்கும் தெரிந்ததாகக் காணப்படும்.

(4×1 புள்ளிகள் = 4 புள்ளிகள்)



CS CamS

(ii) விமர்சனரீதியிலான பெறுநரின் திறன்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

- பகுப்பாய்வு :- ஊடகத் தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது மறைக்கப்பட்டுள்ள அம்சங்களை பகுத்தாய்ந்து வெளிப்படுத்துதல்.
- மதிப்பீடு :- ஊடகத் தகவலின் நன்மை மற்றும் தீமைகளை அறிந்து மதிப்பீடு செய்தல்.
- கூழாக்கல் :- தகவலொன்றில் அல்லது செய்தியொன்றில் காணப்படும் விடயங்களில் ஒத்த மற்றும் வேறுபட்ட பிரிவுகளை ஒப்பிடுதல்.
- தொகுத்தறிதல் :- ஊடகத் தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கேற்பச் சிந்தித்து ஒட்டுமொத்த தொடர்பாடலை அனுமானித்தல்.
- உய்த்தறிதல் :- ஊடகத் தகவலில் பொதுத் தன்மைகள் ஊடாக விசேடமான ஏதேனும் கருதுகோள்களை அனுமானம் செய்தல்.
- தொகுப்பாக்குதல் :- ஊடகத் தகவல்கள் அனைத்தையும் இணைத்துப் புதிய தொகுப்பொன்றை உருவாக்குதல்.
- சாராம்சப்படுத்தல் :- ஊடகத் தகவலின் மையம் மற்றும் முக்கிய விடயங்களை மிகவும் சுருக்கமாக விளக்குதல்.

(2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

வியாபார – பொதுமக்கள் தொடர்பில் நுகர்வோரைக் கவர்வதற்காகப் பயன்படக் கூடுமான உபாயங்கள் மூன்றினை விரிக்குக.

- வியாபாரக் கழிவு வழங்கல்.
- வளர்ச்சிக்கான விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
- நிறுவன சமூகப் பொறுப்புணர்வுச் செயற்றிட்டத்தைச் செயற்படுத்தல் (CSR).
- ஊடகப் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வர்த்தகப் பரப்புரைகளை மேற்கொள்ளல்.
- வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- பரிசில்கள் வழங்குதல்.
- ஊடகத் தொடர்புகளைப் பேணுதல்.
- புகைப்படம் அல்லது வீடியோ பாவனை.
- அனுசரணை வழங்குதல்.
- உள்ளூர், வெளியூர் சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்தல்.
- செய்தி மடல்களை வெளியிடுதல்.

(3×4 புள்ளிகள் = 12 புள்ளிகள்)

(iv) நாடொன்றில் ஊடகக் கொள்கை பெறும் முக்கியத்துவத்தை நான்கு பிரதான காரணிகளின் பேரில் விளக்குக.

- துல்லியத்தன்மை, நடுநிலைத் தன்மை மற்றும் நேர்மை என்பன தொடர்பான மூலதர்மங்களுக்கு மதிப்பளித்தல்.
- ஜனநாயகம் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.
- மானசீகமாக மக்களுடனான தொடர்பை விருத்தி செய்தல்.
- வெளியீட்டு உரிமையை உறுதிப்படுத்துதல்.
- பல்வேறு பண்பாடுகளையும் சேர்ந்த மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
- அனைத்து ஊடக நிறுவனங்களினதும் செயற்பாடுகளைச் சுயாதீனமாக்குதல்.
- பண்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
- ஊடக ஒழுக்கநெறிகளை விருத்தி செய்தல்.
- சுயாதீனப் பொறிமுறையை உருவாக்குதல் மூலமாக ஊடகத்துறையின் வெளிப்படைத் தன்மை விருத்தி செய்தல்.
- ஊடகத்தின் பண்புத் தரத்தை மேம்படுத்துதல்.
- ஊடகவியலாளர்களுக்கு அதிகமான பயிற்சிகளை வழங்குதல்.

(4×4 புள்ளிகள் = 16 புள்ளிகள்)

08. தற்கால ஊடகப் போக்குகளால் பெறுநர்களின் தொடர்பாடற்திறன்கள் விருத்தியடைந்துள்ள

(i) வாய்மொழித் தொடர்பாடற் திறன்களை விருத்தி செய்ய உதவும் அம்சங்கள் நான்கினைப் பெயரிடுக.

- மொழி வளத்தை விருத்தி செய்து கொள்ளல்.
- தமது கருத்துக்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய அறிவை விருத்தி செய்தல்.
- முன்னாயத்தம்.
- முன்வைக்கும் / அளிக்கை செய்யும் திறன்களை மேம்படுத்தல்.
- சிறந்த மொழிப்பாவனை.
- தனிப்பட்ட அடையாளத்தையும், தனித்துவத்தையும் உருவாக்கிக் கொள்ளல்.
- பொறுப்புடன் மொழியைப் பயன்படுத்துதல்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் வாய்மொழிசாராத தொடர்பாடலைப் பயன்படுத்தல்.
- பெறுநருக்கு ஏற்ப பொருத்தமான வாய்மொழித் தொடர்பாடலைப் பயன்படுத்துதல்.
- பேச்சு மற்றும் எழுத்துத் தொடர்பாடலின்போது பின்பற்றவேண்டிய மொழிசார் விதிமுறைகளைப் பின்பற்றுதல்.

(4×1 புள்ளிகள்= 4 புள்ளிக

(ii) கல்வித் தேவைகளுக்காக மெய்நிகர்த் தொடர்பாடலானது எவ்வாறு பயன்படக் கூடும் என்பதை இரண்டு வழிகளில் சுருக்கமாக விளக்குக.

- நிகழ்நிலை விரிவுரைகளை நடாத்துவதற்கு மற்றும் பங்குபற்றுவதற்கு.
- பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க மற்றும் பதிவுகளை மேற்கொள்வதற்கு.
- பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு.
- கல்வி நடவடிக்கைகளின்போது குழுவாகச் செயற்படுவதற்கும் மற்றும் குழுக்களை இனங்கண்டு அவற்றினிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும்.
- புகைப்படங்கள், ஒளிப்படங்கள், ஒலி மூலங்கள் முதலானவற்றிலிருந்து கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், தரவிறக்கம் செய்தல்.
- சுயகற்றல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல்.



CS CamS

- கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்.
- கற்றல் நடவடிக்கைகளுக்காகப் பல்வேறு பிரயோகங்களையும், மென்பொருட்களையும், பயன்படுத்துதல் (Yahoo, Google etc).
- கற்றலுடன் தொடர்புடைய விடயங்களை ஆவணப்படுத்தி வைத்து நீண்டகாலக் கற்றல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துதல்.

(2X4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

(iii) பாரம்பரிய ஊடகங்களின் சிறப்பியல்புகள் மூன்றினை உதாரணங்களுடன் விபரிக்குக.

- எளிய கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- கருத்துக்களின் உள்ளடக்கம் நோக்கங்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டிருத்தல்.
- நெகிழ்வுத்தன்மையானது.
- பண்பாட்டுச் சூழமைவுகளை வெளிப்படுத்தக் கூடியது.
- குறைந்த செலவுடைய ஊடகவழிமுறை.
- பண்பாட்டுப் பரிமாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது.
- உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியது.
- சமூகத்தின் நேர்மறையான போக்குகளை விமர்சிக்கக் கூடியது.
- நம்பிக்கை மற்றும் விசுவாசம் காணப்படுதல்.
- பொதுவான ஏற்புடமை மற்றும் பொதுவான தன்மை காணப்படுதல்.
- வாய்மொழி வழியாகப் பேணப்பட்டு வருபவை.
- தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுபவை.

விபரித்திருந்தால் = 3X3 புள்ளிகள் = 9 புள்ளிகள்
உதாரணம் = 3X1 புள்ளி = 3 புள்ளிகள்
(மொத்தம் 12 புள்ளிகள்)

(iv) இலங்கையின் ஊடகத்துறையுடன் தொடர்புடைய நிறுவனப் போக்குகள் நான்கினைப் பெயரிட்டு அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விபரிக்குக.

- உரிமைத்துவம் :- தனியார் ஊடகங்கள் அதிகரித்தல் மற்றும் ஒரு உரிமையாண்மையின் கீழ் பல்வேறு ஊடக நிறுவனங்கள் காணப்படுதல்.
- பிரதேச ஊடகம் :- தலைநகரை மையமாகக் கொண்ட ஊடக நிறுவன முறைமையானது தற்போது வேறு பிரதேசங்களையும் நோக்கி நகர்தல்.
- ஊடகவியலாளர் :- ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தர ஊடகவியலாளர்களுக்கு மேலதிகமாக சுயாதீன ஊடகவியலாளர்களும் உருவாகியுள்ளனர். நிறுவனமையச் செயற்பாட்டில் நின்றும் விலகி தம்மால் உருவாக்கப்பட்ட செய்திகளை பல்வேறு ஊடக நிறுவனங்களுக்கும் அனுப்பும் செயற்பாடு காணப்படுதல். வீட்டில் இருந்தவாறே ஊடகத் தொழிலை ஆற்றுதல்.
- பால்நிலைச் சமநிலை :- ஊடக நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்தல். எனினும், பால்நிலைச் சமநிலையற்ற தன்மை தொடர்ந்தும் காணப்படுதல்.
- ஊடக ஒழுங்குபடுத்தல் :- அரச ஒழுங்குபடுத்தலுக்கு மேலதிகமாக சுயஒழுங்குபடுத்தல் அதிகரித்தல்.



CamScanner

- ஆசிரியர் பீடச் சுதந்திரம் அல்லது ஊடக உள்ளடக்கத் தயாரிப்புச் சுதந்திரம் :-
  நிறுவனக் கட்டுப்பாடு காரணமாக வெகுசன ஊடகங்களில் சுதந்திரமானது குறைவடைந்துள்ளது. ஊடகப் படைப்பாக்கத் தயாரிப்பின்போது அரசியல் மற்றும் பொருளாதார காரணிகள் பற்றியும் கவனம் செலுத்தி அவற்றைத் தயாரித்தல்.

பெயரிட்டிருந்தால் =4X1 புள்ளி = 4 புள்ளிக
விபரித்திருந்தால் = 2X4 புள்ளிகள் = 8 புள்ளிக
உதாரணம் = 2X2 புள்ளிகள் = 4 புள்ளிக

04.

(மொத்தம் 16 புள்ளிக

(i) உடல்மொழியில் காணக்கிடைக்கும் வாய்மொழிசாரா தொடர்பாடல் முறைகள் இரண்டினைப் பெயரிடுக.

- முகபாவங்கள்.
- உடலசைவுகள்.
- கண் தொடர்புகள்.
- அபிநயம்.
- தலையாட்டுதல்.
- சிரித்தல்.
- சமிக்ஞைகள்.

(2X2 புள்ளிகள் = 4 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஊடகக் கழகத்தில் குழுத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் இரண்டினை சுருக்கமாக விபரிக்குக.

- குழுவாகத் தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- பொதுவான ஒரு தீர்மானத்தை எட்டக்கூடியதாக இருத்தல்.
- அறிவு, அனுபவம் மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- புதிய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- பொதுவான கற்றல் மற்றும் மகிழ்வூட்டல்களுக்காகப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வுடன் செயற்படக்கூடியதாக இருத்தல்.
- குழுவாகச்செயற்படும் திறன்களைப் பிரயோகிக்க மற்றும் அவற்றை விருத்தி செய்யக்கூடியதாயிருத்
- வினைத்திறன்மிக்கதாக இருத்தல்.

(2X4 புள்ளிகள் = 8 புள்ளிகள்

(iii) அரிஸ்டோட்டில் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படைக் கூறுகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

- பேச்சாளர் :- தகவலை அல்லது செய்தியை முன்வைப்பவர்.
- பேச்சு :- பேச்சாளர் முன்வைக்கும் தகவல் அல்லது செய்தி.
- கேட்பவர் :- பேச்சைக் கேட்பவர்.
- தாக்கம் :- பேச்சின் மூலம் எதிர்பார்க்கப்படும் அல்லது ஏற்படுத்தப்படும் தாக்கம்.
- சந்தர்ப்பம் :- தகவலை வழங்கக் காரணமான சூழ்நிலை.

விபரித்திருந்தால் = 3X3 புள்ளிகள் = 9 புள்ளி
உதாரணம் = 3X1 புள்ளி = 3 புள்ளி

(மொத்தம் 12 புள்ளி

(iv) நாட்டார் நாடகங்கள் வேறுபட்ட தொடர்பாடல் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. உங்கள் சூழலில் நிகழ்த்தப்பெறும் நாட்டார் நாடகங்கள் / கூத்துக்கள் இரண்டின் பேரில் இக்கூற்றினை உதாரணங்களுடன், தனித்தனியாக விளக்குக.

- காத்தவராயன் கூத்து
- பறைமேளக் கூத்து
- இராவணேசன் கூத்து
- வசந்தன் கூத்து
- அர்ச்சுனன் தபசு
- காமன் கூத்து
- கோவலன் கண்ணகி கூத்து
- உடுக்கடி காதை
- புலியாட்டம்
- ஏனைய நாடகங்கள் மற்றும் கூத்துக்கள்.
- கோலம்
- சொக்கரி
- இராம நாடகம்
- வீரபத்திரர் ஆட்டம்

**பின்வரும் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

- முன்வைக்கப்படும் நாடகம் அல்லது கூத்தில் கதைசார் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடல் செய்யப்படும் சந்தர்ப்பங்கள்.
- நாடகம் அல்லது கூத்தில் கதை சொல்லல், பாடல்கள், இசை, உரையாடல்கள் வழியாகத் தொடர்பாடல் செய்யப்படும் சந்தர்ப்பங்கள்.
- கதாபாத்திரங்கள் மற்றும் கதாபாத்திரங்களின் வடிவமைப்பு முறைமைகள், தோற்றம், வாய்மொழி மற்றும் வாய்மொழிசாரா முறைகள் மூலமாகத் தொடர்பாடல் செய்யப்படும் விதங்கள்.
- நாடகம் அல்லது கூத்திற்கான களத்தை அல்லது பின்னணியை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கலைநுட்பங்கள் மற்றும் பொருட்கள் வழியாகத் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும் விதங்கள்.
- நாடகம் அல்லது கூத்துக்களில் கதாபாத்திரங்கள் வழியாகச் சமூகச்சூழல் சித்திரிக்கப்படுகின்ற விதங்கள்.
- நாடகத்தின் அல்லது கூத்தின் கதாபாத்திரங்களுக்குரிய வேடப்புனைவுகள், ஆடை அணிகலன்கள் மூலம் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும் விதங்கள்.

(மாணவரது சூழலில் உள்ள மேற்படி அல்லது வேறேதேனும் நாட்டார் நாடகங்கள் அல்லது கூத்துக்கள் இரண்டினை மையமாகக் கொண்டு மேற்கூறப்பட்ட தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் உதாரணங்களுடன் விளக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகளையும் வழங்குக.)

(8X2 புள்ளிகள் = 16 புள்ளிகள்)

5.

(i) வானொலி ஊடகத்தின் பண்புகள் இரண்டினைப் பெயரிடுக.

- செவிப்புலத் தொடர்பாடல் ஊடகம்.
- விரைவாகத் தகவல் அல்லது செய்தி வழங்கக்கூடியது.
- தமக்கான முழு ஒலிபரப்பு வலயத்தையும் உள்ளடக்கக்கூடியது.
- எளிமையாக நுகரக்கூடியது.
- ஒரே தடவையில் தகவலை விளங்கிக் கொள்ளக் கூடியதாக முன்வைக்கப்பட முடியும்.
- ஒவ்வோர் பெறுநர் குழுக்களையும் இலக்குவைத்து நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடியும்.
- சர்வதேச, தேசிய, பிரதேசம் சார்ந்த மக்கள் அடிப்படையில் வானொலி வலையமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.
- கேட்டல் ஊடகம் என்பதனால் நேயர்கள் தம் மனங்களில் மனக்காட்சியொன்றை உருவாக்கிக் கொள்ள முடியும்.

- ஏனைய ஊடக வழிமுறைகளுடன் ஒப்பிடுகையில் செலவு குறைவானது.
- பேசுதலும், கேட்டலும் சமநேரத்தில் நிகழக்கூடியது.
- பூகோள வரையறைகள் இழிவளவானது.
- எழுத்தறிவு அவசியமற்றது.
- பெறுநர்களுடன் மிகவும் நெருக்கமான ஊடகம்.
- ஒருவழித் தொடர்பாடல் ஊடகம்.
- நகர்த்தக்கூடிய ஊடகம்.

(2×2 புள்ளிகள் = 4 புள்ளிகள்)

(ii) பேச்சுத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்ய உதவும் அம்சங்கள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

- செவிமடுக்கும் ஆற்றலை விருத்தி செய்தல்.
- வாசித்தல் மூலம் ஆற்றலை விருத்தி செய்தல்.
- சிறந்த பேச்சாளர்களின் பேச்சுப்பாணிகளைப் பின்பற்றுதல்.
- பேச்சுப்பயிற்சியில் ஈடுபடுதல்.
- தனியொருவருக்குப் பேசுதல்.
- சமூகத்திற்குப் பேசுதல்.
- குரலெழுப்பி உச்சரித்தல்.
- வெவ்வேறு விடயங்களை அல்லது பாணிகளை பேச்சில் முன்வைத்தல் .
- மொழிவளத்தை விருத்தி செய்தல்.
- சிறந்த மொழிப்பாவனை.
- பேச்சுத் தொடர்பாடலின்போது வாய்மொழிசாராத் தொடர்பாடலை வினைத்திறனாகப் பயன்படுத்தல்.
- இலக்குப்பெறுநருக்கு ஏற்ற விதத்தில் பேச்சை முன்வைத்தல்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பேச்சுத் தொடர்பாடலை மேற்கொள்ளல்.

(2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

(iii) தற்காலத்தில் விளங்கறிவு எண்ணக்கருவானது பல துறைகள் சார்ந்தும் விரிவடைந்து வருகின்றது. பின்வரும் இரண்டு துறைகளை உதாரணங்களுடன் விளக்குக.

a) காட்சி விளங்கறிவு (Visual Literacy)

- காட்சிகளின் உள்ளடக்கங்களை விளங்கிக் கொள்ளல்.
- காட்சிகளின் படைப்பாக்கரீதியான உருவாக்கத்தை விளங்கிக் கொள்ளல்.
- காட்சிகளை உருவாக்கும் ஆற்றல்.
- நிறம், ஒளி மற்றும் பின்னணி என்பவை பற்றி அறிந்துகொள்ளல்.
- நிறம், ஒளி மற்றும் பின்னணி என்பவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்தும் ஆற்றல்.

b) கணினி விளங்கறிவு (Computer Literacy)

- கணினித் தொழிநுட்பத்தை விளங்கிக் கொள்தல்.
- கணினித் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான தொழிநுட்பச் சாதனங்கள் மற்றும்

மென்பொருட்களை இனங்கண்டு அதனை அல்லது அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல்.

- கணினி உள்ளடக்கம் அல்லது வெளியீடு ஒன்றை உருவாக்கும் ஆற்றல்

விபரித்திருந்தால் = 2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்
உதாரணம் = 2×2 புள்ளிகள் = 4 புள்ளிகள்

மொத்தம் 12 புள்ளிகள்

(iv) தற்கால சமூக மாற்றங்களைப் பூகோளப் பண்பாடு எவ்வாறு பாதித்துள்ளது என்பதை நான்கு பிரதான அம்சங்களின் பேரில் விளக்குக.

- தேசிய பண்பாடு (சுதேச பண்பாடு) அல்லது பண்பாட்டம்சங்கள் ஒடுக்கப்படுதல்.
- பூகோள, பிரசித்த, மேற்கத்தேய பண்பாடுகள் மேலோங்குதல்.
- நுகர்வுப் பண்பாடு தோற்றம் பெறுதல்.
- பண்டமயமாதல் அதிகரித்தல்.
- பண்பாட்டு அதிர்வு ஏற்படுதல்.
- மனித உறவுகள் இயந்திரமயமாதலுக்கு உட்படுதல்.
- ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
- வணிகமயமாதலுக்கு உட்படுதல்.
- மகிழ்வூட்டல் வழங்குதல் பிரசித்தமடைதல்.
- சமூகத் தொடர்பாடல் இழிவளவாகுதல்.
- நிகழ்நிலைக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபாடு அதிகரித்தல்.

(4×4 புள்ளிகள் = 16 புள்ளிகள்)

06.

(i) திரைப்பட ஊடகத்தின் பிரதான வகைப்பாடுகள் இரண்டினைப் பெயரிடுக.

- செயற்பாடு (Action)
- சாகசம் (Adventure)
- கிராபிக்ஸ் (Animation)
- வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் (Biopic)
- கார்ட்டூன் (Cartoon)
- நகைச்சுவை (Comedy)
- விவரணப்படம் (Documentary)
- பேரச்சம் (Horror)
- காதல் (Romance)
- இசை (Music)
- விஞ்ஞானப் புனைவு (Science Fiction)
- திகில் (Thriller)
- யுத்தம் (War)

(2×2 புள்ளிகள் = 4 புள்ளிகள்)

(ii) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் இரண்டு பிரதான தடைகளின் பேரில் செய்தி பாதிக்கப்படுமாற்றலை விபரிக்குக.

- கருத்துக் தடை

  ஊடகச் செய்தியின் உள்ளடக்கத்தை சரியாக விளங்கிக்கொள்ள முடியாது போவதால் ஏற்படும் தடைகள் தவறான நிறுத்தற் குறியீடுகள் பயன்பாடு, தவறான பந்தியமைப்பு, கடினச் சொற்களைப் பயன்படுத்தல் செய்திக்காகப் பயன்படுத்தப்படும் மொழி தெளிவில்லாதிருத்தல், உச்சரிப்புத் தவறு, உப மொழி மற்றும் பிரதேச / வட்டார மொழி பயன்படுத்துதல், தொழினுட்ப மற்றும் பேச்சு மொழி அதிகம் பயன்படுத்துதல் மொழித்துணை அம்சங்களை அதிகம் பயன்படுத்துதல்.

- ஊடகத் தடை

  ஊடகச் செய்தியொன்றின் செல்வழியில் ஏற்படுகின்ற தடைகள்.
  மை கசிந்திருத்தல், தெளிவற்ற புகைப்படம், தெளிவற்ற காட்சிகள், தொழில்நுட்பக் கோளாறுகள், எழுத்துக்கள் ஒன்றின்மேல் ஒன்று அச்சிடப்பட்டிருத்தல்.

(2X4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

(iii) ஊடகத் திறனாய்வில் பயன்படக் கூடுமான கருத்தியல்கள் மூன்றினை விளக்குக.

- மார்க்சிசத் திறனாய்வு

  ஊடகத் தயாரிப்புகள் பொருளாதார ரீதியிலான உயர்சமூகத்தின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுகின்றனவா என்பதைத் திறனாய்வு செய்தல்.

- பெண்ணியம்சார் திறனாய்வு

  பெண் உரிமை மற்றும் பால்நிலைச் சமத்துவம் ஆகிய காரணிகளுக்கூடாக ஊடகத் தயாரிப்புகளை திறனாய்வுக்குட்படுத்துதல்.
  ஊடகங்களில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவது மற்றும் அதற்கான காரணங்கள் ஆராயப்படுதல்.
  ஊடகங்களில் பெண்கள் பொதுமைப்படுத்தல்களுக்கூடாகவே சித்திரிக்கப்படுகின்றனர் என்பது ஆராயப்படுதல்.
  பெண்கள் ஊடகப் படைப்புக்களில் பாலியல் பொருட்களாகச் சித்திரிக்கப்படுவது திறனாயப்படுதல்.

- உளப்பகுப்பாய்வுத் திறனாய்வு

  உளவியல் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்களை ஆராய்தல்.
  ஊடகங்கள் பெறுநர்களது ஆழ்மனதில் மறைந்து காணப்படும் எண்ணங்களைத் தூண்டுமாற்றலை ஆராய்தல்.
  ஊடகங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் உட்கருத்தை ஆராய்தல்.
  எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை ஊடகத் தயாரிப்புகள் அமைதியற்ற தன்மைக்கு உட்படுத்துவது திறனாய்வுக்குட்படுத்துதல்.

(3X4 புள்ளிகள் = 12 புள்ளிகள்)

(iv) "சமூக ஊடகங்களால் ஏற்படும் சமூகத் தாக்கம் நேர்மறையானது மற்றும் எதிர்மறையானது என இரண்டுமேயாகும்." அவ்வாறான நேர்மறை மற்றும் எதிர்மறைத் தாக்கங்கள் இரண்டு வீதம் தனித்தனியாக உதாரணங்களுடன் விளக்குக.

1. சமூக ஊடகங்களால் ஏற்படும் நேர்மறையான சமூகத் தாக்கங்கள்.
   - செயற்படு பெறுநர்கள் தோற்றம்பெறுதல்.
   - தனிநபர் படைப்பாக்கத் திறன்களைப் பகிர்ந்துகொள்ள இயலுமாயிருத்தல்.
   - சமூக நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளை அறிந்துகொள்ளக் கூடியதாயிருத்தல்.
   - மிக எளிதில் முரண்பாடுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தக் கூடுமாயிருத்தல்.
   - கற்றல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக்கூடியதாயிருத்தல்.
   - குறைந்த செலவில் வினைத்திறனாகத் தகவல் பரிமாற்றம் செய்யக் கூடியதாயிருத்தல்.
   - வியாபார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக்கூடியதாயிருத்தல்.
   - தொலைதூரக் கற்றல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்.
   - மாற்றுக் கருத்துக்களை தெரிவிக்கக் கூடியதாயிருத்தல்.
   - உடனடியாகப் பின்னூட்டத்தை வழங்கக் கூடியதாயிருத்தல்.
   - சமூகத் தொடர்புகள் விருத்தியடைதல்.

2. சமூக ஊடகங்களால் ஏற்படும் எதிர்மறையான சமூகத் தாக்கங்கள்.
   - உளவியல் மற்றும் சமூகத் தாக்கங்களைத் தோற்றுவிக்கக்கூடியவை.
   - வன்முறையைத் தூண்டுவதாக அமைதல்.
   - தனிப்பட்ட தகவல் பற்றிய முரண்பாடு ஏற்படுதல்.
   - சைபர் மற்றும் இணையவழித் தாக்குதல்கள் மற்றும் குற்றங்களுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.
   - போலியான மற்றும் தவறான தகவல்கள் பரவுதல் மற்றும் அதிகரித்தல்.
   - போலிக் கணக்குகளின் பாவனை அதிகரித்தல்.
   - தனிநபர்களை அவமதித்தல் அதிகரித்தல்.
   - தீங்கிழைக்கும் நிகழ்ச்சிகளின் மீதான நாட்டம் அதிகரித்தல்.
   - தனிமை மற்றும் அகவுரிமை தொடர்பான முரண்பாடுகள் அதிகரித்தல்.
   - மனவழுத்தம், அதைரியப்படுத்தல் மற்றும் தன்னுயிர் மாய்த்தல் அதிகரித்தல்.

நேர்மறை = 2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்

எதிர்மறை = 2×4 புள்ளிகள் = 8 புள்ளிகள்

(மொத்தம் 16 புள்ளிகள்)

)7. பிராந்திய அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிக்கும் நிபுணர் ஒருவருக்கு அரசாங்க நிறுவனங்கள் பற்றிய சில தகவல்கள் தேவையாக இருந்தன.

(i) தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் நிறுவனங்களிலிருந்து பெற முடியாத (விலக்களிக்கப்பட்ட) இரண்டு வகையான தகவல்களைப் பெயரிடுக.

- அகவுரிமை தொடர்பான தகவல்கள்
- தேசிய பாதுகாப்புக்குப் பங்கமேற்படுத்தக்கூடிய தகவல்கள்.

- இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கிடையிலான சர்வதேச தொடர்புகள் மற்றும் ஒப்பந்தங்களில் எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள்.
- தனிப்பட்ட வைத்திய அறிக்கைகள்.
- நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்கள்.
- பரீட்சைகள் தொடர்பான இரகசிய மற்றும் அந்தரங்கத் தகவல்கள்.
- புலமைச் சொத்துச் சட்டத்தின் மூலம் வணிக உரிமம் பாதுகாப்புப் பெறுகின்ற தகவல்கள்.

(2 x 2 புள்ளிகள்= 4 புள்ளிகள்)

(ii) பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்காக வினாக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. வினாக்கொத்தொன்றைத் தயாரிக்கும்போது அவசியம் செயற்படுத்தப்படக் கூடாத இரண்டு விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

- பக்கச்சார்பான விடையை வழங்கக்கூடியவாறான வினாக்களைத் தயாரித்தல்.
- நீண்ட வினாக்களை வினவுதல்.
- அனுமானமாக வினாக்களை வினவுதல்.
- குழப்பமான வினாக்களை வினவுதல்.
- தரவு வழங்குநரைச் சிரமத்திற்குள்ளாக்கும் வகையில் வினாக்களை வினவுதல்.
- ஒரு வினாவை மீண்டும் மீண்டும் வினவுதல்.
- வினாக்கொத்தில் வினாக்களின் ஒழுங்கமைப்புத் தொடர்பில் கவனத்திற்கொள்ளாதிருத்தல்.
- வினாக்கொத்தில் வினா நிலை தொடர்பில் கவனத்திற்கொள்ளாதிருத்தல்.

(2 x 4 புள்ளிகள் = 8 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்போது முரண்பாடுகள் எழ முடியும். முரண்பாட்டுத் தீர்வில் பின்பற்றப்படும் படிமுறைகள் மூன்றினை விபரிக்குக.

- முரண்பாட்டை இனங்காணல்.
- எதிர்த்தரப்பினருடன் தொடர்பாடல் மேற்கொள்ளல்.
- நடைமுறைப்படுத்தக்கூடிய ஆலோசனைகளை முன்வைத்தல்.
- பொருத்தமான தீர்மானத்தைத் தெரிவுசெய்தல்.
- மூன்றாவதாக ஒரு நபரை மத்தியஸ்தராக நியமித்தல் / தலையீட்டாளர் ஒருவரை நியமித்தல்.
- மாற்றுவழிகளை ஆராய்தல்.
- இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய (Win-Win) தீர்மானமொன்றை அடையமுயற்சித்தல்.

(3 x 4 புள்ளிகள் = 12 புள்ளிகள்)

(iv) சமூகமொன்றுக்கு அபிவிருத்தித் தகவல்களை எடுத்துச் செல்லும் பொறிமுறையில் ஊடகக்குவிலை தாக்கத்தைச் செலுத்துகின்றது. பின்வரும் ஊடகங்களின் பேரில் ஊடகக்குவிலையை விளக்குக.

a) செய்திப் பத்திரிகை - செய்திப் பத்திரிகையின் இணையப் பதிப்பு

- உடனடிப் பின்னூட்டம் வழங்கக் கூடியதாயிருத்தல்.
- உடனடியாகச் செய்தியை வாசித்தறியக் கூடியதாயிருத்தல்.
- செய்திகளைப் பரிமாற்றிக்கொள்ளக் கூடியதாயிருத்தல்.
- செய்திப் பத்திரிகையின் தலையங்கங்களுடன் தொடர்புடைய காணொளி, புகைப்படங்கள்



CS CamScanner



Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

மற்றும் ஒலிப்பதிவுகளைப் பதிவிறக்கம் செய்யக் கூடியதாயிருத்தல்.

- கடந்தகாலச் செய்திப் பத்திரிகைகளை வாசிக்கக் கூடியதாயிருத்தல்.
- தேவையான செய்திகளைத் தரவிறக்கம் செய்யக் கூடியதாயிருத்தல்.
- பெறுநரது இரசனைக்கேற்பச் செய்திகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருத்தல்.
- செய்திகளை வகைப்படுத்தி வாசிக்கக் கூடியதாயிருத்தல்.

b) வானொலி - இணையவழி வானொலி

- தேசிய மற்றும் சர்வதேச வானொலி நிகழ்ச்சிகளைச் செவிமடுக்கக் கூடியதாயிருத்தல்.
- தனித்த பெறுநர்களுக்குரிய (Niche Audince) வானொலி அலைவரிசைகள் காணப்படுதல்.
- உடனடியாகப் பின்னூட்டம் வழங்கக் கூடியதாயிருத்தல்.
- செய்திகளைத் தரவிறக்கம் செய்யக் கூடியதாயிருத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலிருந்தும் நேயர்கள் வானொலிகளுடன் இணையும் வசதி காணப்படல்.
- எண்ணிம வானொலி மற்றும் இணைய வானொலி வசதிகள் காணப்படல்.

c) தொலைக்காட்சி - இணையவழித் தொலைக்காட்சி

- தேசிய மற்றும் சர்வதேச தொலைக்காட்சி அலைவரிசைகளைப் பார்வையிடக்கூடியதாக இருத்தல்
- தனித்த பெறுநர்களுக்குரிய (Niche Audince ) தொலைக்காட்சி அலைவரிசைகள் காணப்படுதல்
- உடனடியாகப் பின்னூட்டங்களை வழங்கக் கூடியதாயிருத்தல்.
- நிகழ்ச்சிகளைத் தரவிறக்கம் செய்யக் கூடியதாயிருத்தல்.
- உள்ளடக்கங்களைப் பரிமாற்றிக் கொள்ளக் கூடியதாயிருத்தல்.
- தொலைக்காட்சி நாடகங்கள், கார்ட்டூன் மற்றும் நிகழ்ச்சிகளை YouTube தளத்தில் பார்வையிடக் கூடியதாயிருத்தல்

d) சினிமா - இணையவழி சினிமா

- தேசிய மற்றும் சர்வதேசத் திரைப்படங்களைப் பார்வையிடக் கூடியதாயிருத்தல்.
- பலவித பண்பாட்டு மற்றும் பல்மொழித் திரைப்படங்களைப் பார்வையிடக் கூடியதாயிருத்தல்.
- வெவ்வேறு வகைப்பாடுகளுக்குரிய திரைப்படங்களை அணுகி, அவற்றைப் பார்வையிடக் கூடியதாயிருத்தல்.
- வெவ்வேறு இணையத்தளங்கள் ஊடாகத் திரைப்படங்களைப் பார்வையிடக் கூடியதாயிருத்தல்.
- பார்வையாளர்கள் தமது இரசனைக்கேற்பத் திரைப்படங்களை தெரிவுசெய்யக் கூடியதாயிருத்தல்.
- திரைப்படங்களைத் தரவிறக்கம் செய்யக் கூடியதாயிருத்தல்.
- OTT போன்ற தளங்களில் தெரிவு செய்யப்பட்ட மற்றும் விரும்பிய திரைப்படங்களைப் பார்வையிடக் கூடியதாயிருத்தல்.

(மேற்காணும் ஒவ்வொரு ஊடகங்களின் இணையப் பதிப்புக்களில் ஊடகக் குவிகை செயற்படுத்தப்படுமாற்றலை பொருத்தமான விடைகளுடன் விபரித்திருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.) (4X 4 புள்ளிகள் = 16 புள்ளிகள்)



(14) WWW.PastPapers.WiKi (14)
Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න